©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[விலை: ரூ. 2.40 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 36] சென்னை, புதன்கிழமை, செப்டம்பர் 16, 2009
ஆவணி 31, திருவள்ளுவர் ஆண்டு–2040

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2009–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 3 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 11/2009**

***2007–ஆம் ஆண்டு திருநெல்வேலி, அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டம்***

இந்திய குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2009–ஆம் ஆண்டு திருநெல்வேலி, அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2008–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 28/2007.

56-ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2007–ஆம் ஆண்டு திருநெல்வேலி, அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் 56–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், "ஓர் ஆண்டு" என்று வருகின்ற சொற்றொடருக்குப்பதிலாக, "இரண்டு ஆண்டுகள்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

செல்லத் தக்கதாகுதல்.

**3.** முதன்மைச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும், 56–ஆம் பிரிவின் (5)–ஆம் உட்பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட குழுக்கள் அல்லது 2008–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17–ஆம் நாளன்று தொடங்கி, 2009–ஆம் ஆண்டு திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமானது, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் தேதியுடன் முடிவடையும் கால அளவின்போது, அத்தகைய குழுக்களாகத் தொடர்ந்து இருந்துவந்த அக்குழுக்கள் சட்டத்தின்படி செல்லத்தக்க வகையில் அமைத்துருவாக்கப் பட்டவையாகவோ அல்லது தொடர்ந்து வந்திருப்பவையாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அந்தக்கால அளவின்போது அத்தகைய குழுக்களால் செலுத்தப்பட்ட அதிகாரம்

எதுவுமோ அல்லது புரியப்பட்ட கடமை எதுவுமோ, இந்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டமானது அனைத்து முக்கியமான காலங்களிலும் நடைமுறையில் இருந்துள்ளது போன்று, அக்குழுக்களால் செல்லத்தக்க வகையில் செலுத்தப்பட்டிருப்பதாகவோ அல்லது புரியப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2009–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 3–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 12/2009**

***1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்திய குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 21/1994.

167 மற்றும் 168–ஆம் பிரிவுகள் விட்டுவிடப் படுதல்.

**2.** (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 167 மற்றும் 168–ஆம் பிரிவுகள் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

169–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 169–ஆம் பிரிவில்;

(1) ஓரத் தலைப்பில் ''உள்ளூர்த் தீர்வை, உள்ளூர்த் தீர்வை மேல்வரி மற்றும்'' என்று வருகின்ற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(2) (a) எனும் கூறில், ''167–ஆம் பிரிவின் கீழ் உள்ளூர்த் தீர்வை, 168–ஆம் பிரிவின் கீழ் உள்ளூர்த் தீர்வை மேல்வரி மற்றும்'' என்று வருகின்ற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(3) (b) எனும் கூறில், ''உள்ளூர்த் தீர்வை, உள்ளூர்த் தீர்வை மேல்வரி மற்றும்'' என்று வருகின்ற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(4) (c) எனும் கூறில், ''உள்ளூர்த் தீர்வை, உள்ளூர்த் தீர்வை மேல்வரி மற்றும்'' என்று வருகின்ற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

176–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**4.** முதன்மைச் சட்டத்தின் 176–ஆம் பிரிவில், ''168 அல்லது 171–ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள மேல்வரி அல்லது வரி கிராம ஊராட்சியால் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் வழங்கப்படுதல்'' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''171–ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட மேல்வரி அல்லது வரி கிராம ஊராட்சியால் வழங்கப்படுதல்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

186–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தின் 186–ஆம் பிரிவில் (b) எனும் கூறில், ''உள்ளூர்த் தீர்வை, உள்ளூர்த் தீர்வை மேல்வரி'' என்று வருகின்ற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

188–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**6.** முதன்மைச் சட்டத்தின் **188–**ஆம் பிரிவில் **(1)–**ஆம் உட்பிரிவில், (d)–எனும் கூறில் "உள்ளூர்த் தீர்வை, உள்ளூர்த் தீர்வை மேல்வரி" என்று வருகின்ற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2009ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 3—ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 13/2009**

**1951—ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், 2009—ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2009—ஆம் ஆண்டு மே திங்கள் 29—ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் XX/1951.

3—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1951—ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் 3—ஆம் பிரிவில், ''முதலமைச்சர்'' என்னும் சொல்லானது வருகின்ற மூன்று இடங்களிலும், அதற்குப் பதிலாக ''முதலமைச்சர், துணை முதலமைச்சர்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.